செய்தி வெளியீடு எண்: 369 நாள்: 6.9.07

செய்தித்தாள் அறிவிப்பு

1. தமிழ்நாடு நிதித்துறையின் செப்டம்பர் 26, 1997 ஆம் நாளிட்ட எண்.77(எல்)/வ.வ–II/97 ஆம் அறிவிக்கையில் கண்டுள்ள நிபந்தனைகளின்படி வெளியிடப்பட்ட 12.30 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2007, 5.10.2007 வரையிலும் அந்நாள் உட்படவும், அதற்குரிய வட்டித் தொகையுடன் 06.10.2007 ம் நாளன்று முகப்பு மதிப்பின்படி திருப்பிச் செலுத்தப்படும் என்ற செய்தியை பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது. செலவாணி முறிச்சட்டம் 1881–ன் கீழ் மேற்குறிப்பிட்ட நாள் யாதொரு மாநில அரசால் விடுமுறையாக அறிவிக்கப்படுமேயானால் அம்மாநிலத்தில் உள்ள திருப்பிச் செலுத்தும் அலுவலகங்களினால் அந்நாளுக்கு முந்தைய அலுவலக நாளில் திருப்பிச் செலுத்தப்படும். 06.10.2007 நாள் முதற்கொண்டும் அந்நாளுக்குப் பிறகும் இக்கடனுக்கு வட்டி சேராது.

2. உரிய நாளன்று தொகையைத் திருப்பிக் கொடுக்க வசதியாக இருக்கும் வகையில் 12.30 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2007, பத்திரங்கள் வைத்திருப்பவர்கள், அவர்கள் வைத்திருக்கும் கடன் பத்திரங்களை அவை எங்கு முகப்பிடப்பட்டுள்ளதோ/பதிவு செய்யப்பட்டுள்ளதோ அங்கு, அதாவது இந்திய ரிசர்வ் வங்கியின் பொதுக்கடன் அலுவலகம், கருவூலம் மற்றும் சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளை அல்லது அதன் துணை வங்கிகளில் 20 நாட்களுக்கு முன்னதாகவே ஒப்படைக்கவேண்டும். கடன் தொகையை திருப்பிப் பெறுவதற்காக கொடுக்கப்படும் கடன் பத்திரங்களின் பின் பக்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய முறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

**“சான்றிதழ்க்குரிய அசல் தொகை பெறப்பட்டது”.**

3. பாரத ஸ்டேட் வங்கியின் கிளை ஒன்று அல்லது அதன் துணை வங்கிகளில் ஏதேனும் ஒன்று கருவூலப் பணிகளை ஆற்றும் இடங்களில், இக்கடன் பத்திரங்கள் பங்கு முதல் சான்றிதழ்கள் வடிவில் இருக்குமாயின், சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையில்தான் ஒப்படைக்க வேண்டுமேயொழிய கருவூலத்திலோ, சார் கருவூலத்திலோ ஒப்படைக்கக்கூடாது என்பதை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

4. கடன் தொகையை திருப்பிக்கொடுக்கக் கோரி, கடன் பத்திரங்கள் முகப்பிடப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களில் தொகையைப் பெற விரும்புவோர் கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரங்களின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, இந்திய ரிசர்வ் வங்கியின், பொதுக்கடன் அலுவலகத்திற்குப் பதிவு பெற்ற மற்றும் காப்புறுதி அஞ்சலில் அனுப்பவேண்டும். யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது தமிழ்நாடு மாநிலத்தில் அரசு கருவூலப்பணியை ஆற்றிவரும் பாரத ஸ்டேட் வங்கியின் கிளை அல்லது அதன் துணை வங்கிகளில் ஏதேனும் ஒன்றில் தொகையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இந்திய ரிசர்வ் வங்கியின், பொதுக்கடன் அலுவலகம் கேட்புக் காசோலை வழங்கும்.

**********

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.